(Registered as a Newspaper in Ceylon)
P. M. G. No. H. A. 59/30 of 1939.

யுத்தகாலப்பிரசுரம்

உ
சிவமயம்.

விரோதி ஷு (1889) ஆவணி மீ
உஅ|உ ஆரம்பமானது

இந்துசாதனம்

பத்திரிக்கிரயம்
வருஷம் ஒன்றுக்கு யாழ்ப்பாணப்பட்டினசந்தாவிலக்கு
தமிழ் ரூபா 5 00 இலங்கை தமிழும் 9-00
இலங்கை இந்தியா 8-00 இலங்கை தமிழும் 12-00
தொடுவாய்ப்பகுதி 9-00 இலங்கை தமிழும் 13-00
தனிப்பிரதி சதம் 5
முற்பணமனுப்பினலன்றிக் கவனிக்கப்படமாட்டா.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈச னெந்தை யிணையடி நீழலே.
—அப்பர் சுவாமிகள்

விளம்பர விகிதம்
முதன்முறைக்கு
ஒருவரிக்கு ரூபா 10-00 அரைக்கலம் ரூபா 5-50
காற்கலம் ரூபா 4-00 ஒருஅங்குலம் ரூ. 1-00
அடுத்தமுறைகட்கு மேற்படி விகிதங்களிற்பாதி
காலம் நீடித்த விளம்பரங்கள் விசேஷ விளம்பரங்கள் விஷயத்தில் மானேஜரிடம் கேளிற் கண்டேனும் எழுத்து மூலமாகவேனும் ஒழுங்கு செய்வரகும். உடன்பணம் அனுப்பப்படா விளம்பரங்கள் ஏற்கப்படமாட்டா.

[புத்தகம்—ரு] யாழ்ப்பாணம்:— பிரமாதிஷு புரட்டாதிமீ ௨௬௨ (1939 ஒக்டோபர்12 திங்கட்கிழமை) [இலக்கம் ரு]

இடிந்த கோயில்

வாணி சரணன்

ஒரு பரந்த இடை வெளியினிடையே ஓர் அழகிய சாலை வளைந்து வளைந்து செல்கிறது. அதன் இருபுறத்திலும் குளிர்ந்த நிழற்தரும் இலைகள் அடர்ந்த மரங்கள் வானுற ஓங்கி வளர்ந்து சாலையினமீது கவிந்து கொண்டு ஒருகூடாரம்போல் விளங்குகின்றன. அச் சாலையின் மீது எவ்வளவு தூரம் நடந்தாலும் வழிப்போக்கர்களுக்கு அலுப்பு ஏற்படாதபோல் தோன்றுகிறது. சாலையினின்று வெகுதூரத்தில் ஒரு மலைத் தொடரின் மகுடமானதோறறும் ஒரு சிறந்த சித்திரத்தை ஞாபகமூட்டுகிறது. தூரத்தின் மிருதுபால் அதன் மீது லேசான நீல நிறம் தீட்டியது போல் காட்சியளிக்கின்றது.

சாங்யோரத்தில் ஒரு கோயில். அழகச் சுற்றிலும் 'குளுகுளு'வென்று அடர்ந்த பசுமரங்கள் சூழ்ந்திருந்தன. அதன் முன்பாகமெல்லாம் இடிந்து பாழடைந்து கிடக்கிறது. அதனருகில் ஒரு குளம். அதன் படிகளும் காலத்தின் போக்கால் குலைந்து கிடந்தன. ஆனால் அதன் நடுவில் பளிங்குபோல் தண்ணீர் தங்கி இருந்தது. அந்த இடத்திலிருந்து வெகு தூரம்வரை எங்கும் தண்ணீர் இல்லையெனினும் வழிப்போக்கர்கள் தங்கள் கொண்டுவரும் சாத மூட்டைகளை அவிழ்த்துச் சாப்பிட ஆயத்தப்பார்கள். இடிந்த கோயிலில் பலர் இளைப்பாறிக் கொண்டிருப்பார்கள். வெகுதூரம் வழிநடக்கவர்களுக்கு அந்த இடம் சுவர்க்கம்போல் இருக்கும்.

அந்தக் கோயிலில் பூஜை கிடையாது; விளக்குகள் கிடையா; சுவாமியைத் தரிசிக்க மனிதர்கள் வருவதில்லை; அரனுள் சுவாமிய இருக்கிறாரோ இல்லையோ தெரியவில்லை. அதன் காப்பக்கிரகத்தில் அவ்வளவு இருள் சூழ்ந்திருந்தது.

ஒருநாள் நான் வீட்டில் சண்டை செய்துவிட்டு எங்கு போவதென்று தோக்கமின்றி மேற்கூறிய சாலை வழியே நடந்து கொண்டிருந்தேன். இளைப்பாற எண்ணி அக்கோயிலுக்குச் சென்று படுத்துக் கொண்டேன். தூங்கலாம் என்று எண்ணினேன். ஏதேனையினுல் நான் கண்களை அழுத்தி மூடிக் கொண்டாலும் தூக்கம் வரவில்லை. நான் சென்ற சிறிது நேரத்திற்கெல்லாம் அங்கே ஒரு கார் வந்து நின்றது. அதை ஓட்டி வந்தவர் காரினின்றும் இறங்கித் தாம் கொண்டுவந்திருந்த பலகாரத்தையும் உண்டு காப்பியையும் குடித்து விட்டுத் தாம் வந்த வேலையைத் தொடங்கினர்; அக்கோயிலின் கம்பங்கள் சுவர்கள் முதலியவற்றை எல்லாம் மிகக் கவனத்தோடு ஆராய்ந்தார். எங்காங்கும் எழுதுகருக்கள் தென்பட்டால் அவற்றை வெகுநேரம் கூர்ந்து கவனித்து விட்டுத் தம் குறிப்புப்புத்தகத்தில் ஏதேதோ எழுதிக் கொண்டார். 'ஒரு டார்ச்' விளக்கை எடுத்துக் கொண்டு கோயிலின் உள்பாகத்தையெல்லாம் மிக்க கவனத்துடன் பார்த்தார். பிறகு கோயிலின் தலையை எல்லாம் தோண்டிப் பார்த்து அங்கு கிடைத்த சில சுழாம் சுற்கள், அருப்பிடித்த இருப்புத் தூண்டுகள் முதலியவற்றை எடுத்து ஒரு பையிற் போட்டுக் கொண்டார். இதை எல்லாம் பார்த்த எனக்கு அவர்மீது சிறிது சந்தேகம் தோன்றியது. அவருக்கு மூளைக் கோளாறு ஏதாகிலும் இருக்குமோ என்று எண்ணினேன். பிறகு அவர் ஒரு மரத்தடியில் உட்கார்ந்து ஒரு புத்தகத்தைப் படிக்கத் தொடங்கினர். அப்போழுது நான் அவரை நோக்கி, "எதற்காக இவ்வளவெல்லாம் செய்கிறீர்கள்?" என்று கேட்டேன். "நான் ஒரு ஆராய்ச்சியின் பொருட்டு சுற்றுப் பிரயாணம் செய்து வருகிறேன். இக்கோயில் ஆராய்ச்சியில் பல தண்ணிய விஷயங்களை அறிந்தேன். இக்கோயில் ஏறக்குறைய ஆயிரம் வருஷங்களுக்குமுன் கட்டப்பட்டிருக்க வேண்டும். இது கட்டப்பட்ட பொழுது இந்தியா எல்லாத் துறைகளிலும் உன்னத நிலையை அடைந்திருந்ததாகத் தெரிகிறது. நன்கு ஆராய்ந்தால், உலகத்திலேயே மனிதர்கள் முதலில் இந்தப் பிரதேசத்தில்தான் உதித்திருக்க வேண்டுமெனத் தெரிகிறது" என்று பலவாறு பேசிக்கொண்டே போனர். அவர் பேச்சிலிருந்து அவர் ஒரு சரித்திர ஆராய்ச்சியாளர் என்று தெரிந்து கொண்டேன்.

அவர் சென்றபின் ஓர் இரட்டை மாட்டுவண்டி வந்து அங்கே நின்றது. அதிலிருந்து ஒரு பருத்த உடலுடன் கூடிய ஒருவரும், அவரது மனைவி, இரண்டு பிள்ளைகள் ஆகியவர்கள் இறங்கினர்கள். அவர்கள் குளத்திற்குச் சென்று தாங்கள் கொண்டுவந்திருந்த சாதத்தைச் சாப்பிட்டுவிட்டு கோயிலின் முன்பிருந்த ஒரு மரத்தடியில் வந்து உட்கார்ந்தார்கள். அவர் தாமோதரில் இருந்து; பார்த்தது போல் அந்தக் கோயிலைப்பற்றி ஒரு நீண்ட சுடு விட்டார். பிறகு, "அந்தக்காலத்தில் இங்கு நினமும் சாப்பிட்டவர்களின் தொகைக்கு ஓர் அளவு கிடையாது. எவ்வளவு பேர் வந்தாலும் சாப்பாடு, எத்தனை நாள் தங்கியிருந்தாலும் கேளி இல்லை. அந்தமாதிரி இப்பொழுது இருந்தால் நாம் குடும்பக் கவலை இல்லாமல் இருக்கலாம்" என்று வருந்தினர்.

இதற்கிடையிலிருவர்கள், "அடே வெங்கிட்டு! இந்த இடம் விளையாட எவ்வளவு நன்றாக இருக்கு பாரடா, நம்ம சிநேகிதரை எல்லாம் இங்கே அழைக்கண்டி வந்துட்டா நன்னாவிளையாடலாம். இந்தக் கோவிலுக்குளேயே ஒளிஞ்சுண்டுட்டா ஒத்தரையும் கண்டு பிடிக்கவே முடியாது—அடேடேய்! இந்தப் பொம்மைகெல்லாம் மூக்கை யாரோ உடைச்சுட்டடேய, சாமப்பனும் அதன் பலலை எல்லாம் உடைப்பாம்பாடா" என்று கூறிக்கொண்டே கம்பங்களில் காணப்பட்ட சிற்பங்களின் முகங்களை உடைக்க ஆரம்பித்தார்கள்.

அதே சமயம் அங்கு ஒரு கலாரசிகன் வந்தான். குளத்திற்குப் போய் முகத்தைக் கழுவிக்கொண்டு இரண்டு கைநீர் அருந்திவிட்டு மண்டபத்தினருகே வந்தான். சிறுவர்களின் செயல்களைக்கண்ட அவன் கோபமடைந்ததைக் கண்டவன்போல் துடிதுடித்தான். அவர்களைக் கடிந்து விரட்டினான். அவர்கள் கல்லைக் கீழே போட்டுவிட்டு ஓடிப்போய்விட்டார்கள். இதைக்கண்ட அவர்களுடைய தகப்பனர், "பசங்கள் கம்

திருமாந்துறை—பண்
—நட்டராகம்

நின்று ஞாயிறமண் டோரு நிலையிலர்
நெடுங்கறை நற்வேலம்
நன்று மாங்கனி கதலியின் பலங்களு
நாணலி னுரைவாரி
ஒன்றி நேர்தரு காவிரி வடகரை
மாந்துறை யொரு க்ரலம்
அன்றி யுள்ளழிக் தெழும் பரி
சழிந்து லதுவவர்க்கிடமாமே

—சம்பந்தசுவாமிகள்.

[illegible]த்தை அடித்துக்கொண்டிருந்தால் [illegible]க்கென்னங்காணும் பேய்டுத்து? [illegible]ம்ம தலையில் கலலோ பேட்டார்[illegible]?" என்று கலாரசிகனை நோக்கிக் கடுமையாகக் கேட்டார். அவன் ஒன்றும் பதில்சொல்லவில்லை. அவன் பார்த்த பார்வையிலேயே அவர் மேலே பேச முடியாமல் திணறினர். உடனே தம் வண்டியைக் கட்டிக் கொண்டு பிரயாணத்தை மேலே தொடர்ந்தார். ரசிகன் ஒவ்வொரு சம்பத்தினருகேயும் நின்று அவறை வியப்போடு நோக்கினான்; சிற்பங்களிற் காணப்பட்ட ரேகைகளின் ஒவ்வொரு வளைவையும் கண்டு வியந்தான். அச் சிற்பங்கள் உயிர்பெற்று அவனுடன் பேசுவதுபோல் அவறை நோக்கினன். நாலும் அவனருகேயே போய் நின்றேன். என்னைப் பார்த்தவுடன் அவன், "இக்காலத்தில் இதுபோன்ற சிற்பம் ஒன்றை யாவது அமைக்கும் திறமை யாருக்காவது இருக்கிறதா? அக்காலச் சிறுவர்களுக்குக் கல் மெழுகுபோன்றிருந்ததுபோலும்! என்ன தோற்றம்! என்ன அழகு! என்ன உணர்ச்சி! சிற்பி தன் மனதிலிருந்த உணர்ச்சியை இச் சிற்பங்களில் அப்படியே கொட்டி இருப்பதை நீர் காணவில்லையா? ஐயா! இவையெல்லாம் பாழாய்ப் போகின்றனவே! இவற்றை எல்லாம் காப்பார் ஒருவரும் இல்லையே!" என்று வருத்தத்தோடு கூறினான். "ஆம்" என்று நானும் தலையசைத்தேன். அதன்பின் சாலை வழியே போய்க் கொண்டிருந்த இரு வெள்ளையர் அங்கு வந்தனர். அங்கு காணப்பட்ட சிற்பங்களைக் கண்டு அவர்கள் வியந்தே இருக்கவேண்டும். ஆனால் ஒரு அலட்சியம். ஒரு பொருமை. இந்தியாவிலும் இத்தனை உயர்ந்த கலைகள் இருந்தனவேயென்று கருதினர்போலும். அவற்றைக் காலவீணாக்கத்துவிட்டு, "இவை எல்லாம் அக்காலச் சோம்பேறிகளின் வேலைகள்" என்று கூறிக்கொண்டே போய்விட்டார்கள்.

கடைசியாக என்னைப் போன்று ஓர் அபாக்கியன் அங்கு வந்தான். அவனுடைய வாழ்நாளை முற்றிலும் தோலவி. அவன் எத்தனைதரம் படைஎடுத்தபோதிலும் பி. ஏ. பரீட்சையில் தேறவே இல்லை. அதிக நாள் படித்தநாலும் வேலை இல்லாதிருந்ததாலும் சொத்துக்களை எல்லாம் இழந்துவிட்டான். மிகுந்த கஷ்டத்தினபேரில் ஓர் ஆரம்பப் பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயராகச் சொல்ப சம்பளத்தில் அமர்ந்தான்.

அவனுல் காதலிக்கப் பட்டவள், அவனை மணக்க மறுத்துவிட்டாள். அவனுக்கு விருப்பமில்லாத மணம் பிறகு மிலாலத்திற்குள் மாமனர் இறந்துவிட்டதால் அவனுடைய மாமியாரும் அவன் வீட்டிலேயே தங்கி இருக்கத் தீர்மானித்துவிட்

தொடர்ச்சி 3-ம பக்கம்

சீன யாத்திரையில் திடுக்கிடும்சம்பவங்கள்

ஜவஹரின் 4-வது கட்டுரையிற் காணப்படுங் குறிப்புக்கள்

தமது சீன யாத்திரையின் விபரங்களை வெளியிட்டுப் பண்டித ஜவஹர் "நேஷனல் ஹெரால்டு" ப்பத்திரிகையில் எழுதி வரும் கட்டுரைகளில் 4வது கட்டுரை இப்பொழுது பிரசுரமாயிருக்கிறது:-

ஆகஸ்ட்மீ 24-ந் திகதி

நேற்றிரவு நடந்த விமானப் படை யெடுப்பில் ஜப்பானியருக்குத் தோல்வி ஏற்கப்பட்டது. நகருக்கு வெளியே சீன விமானங்கள் அவர்தைத் தாக்கியதாகவும், இரு படைகளுக்கு மிடையே கடுமையான சண்டை நடந்ததாகவுந் தெரிகிறது. ஒரு குடிசை நாசமாயிற்று. இருவருக்குச் சொற்ப காயமேற்பட்டது. இதை பொட்டி இன்னுஞ் சில தினங்களுக்கு விமானப்படை யெடுப்புகள் நடக்கலாம். இவற்றிற்கு சிலவெளி உதவி செய்யும்.

நேற்றிரவு நடந்த விமானப் படை யெடுப்பின் போது என்னுடைய பத்திரத் தன்மைக்காக இராணுவ அதிகாரி பெரிதும் கவலைப்பட்டார். அவருக்காகக் பூமிக்கடியிற் பிரத்தியேகமாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கு இடத்துக்கு என்னை அனுப்பி விடும்படி அவர் தகவலறிவித்தார். ஆயின் அதற்குள் நான் அக்கிய நாட்டு மந்திரி இடத்துக்குப் போய் விட்டேன். மேற்படி அதிகாரியைப் போல இன்னும் பல பிரபலஸ்தர்கள் தங்கள் தங்கள் இடத்துக்குவந்து சேரும்படி என்னை அழைத்து மரியாதை செய்தனர்.

கோமின்டாங் ஸ்தாபனம்

மறுநாட் காலையில் கோமின்டாங் காரியதரிசி அந்த ஸ்தாபனத்தின் அமைப்பை எனக்கு விவரித்துக் கூறினர். ஆயின் அது மிகவும் சிக்கலானதாக இருக்கிறது. அதன் விஷயங்கள் இன்னும் எனக்கு விளங்கவில்லை. அது தன்னை ஜனகாயக ஸ்தாபனமென்று அழைத்துக் கொண்டாலும் அது முழுவதும் உண்மையல்லவென்பதை நான் அறிந்தேன். அப்பால் அரசாங்கத்தின் அமைப்பை நான் தெரிந்துகொண்டேன். இதே இன்னும் சிக்கலானதாகவே இருக்கிறது. அரசாங்கத்துக்கும் கோமின்டாங்குக்கு மிடையேயுள்ள சம்பந்தம் அபூர்வமானதாகும்.

பின்னர், அகிலநாட்டு மந்திரி டக்டர் வாங் என்பாருடன் நீண்ட நேரம் சம்பாஷித்தேன். அதன் பிலவப்பிரசார மந்திரியைச் சந்தித்தேன். அவர் வேலையில் நான் திருப்தியடைந்தேன்.

பின்னர் ஒரு ஹோட்டலில் நடந்திருந்துக்குப் போனேன். அங்கு இராணுவ பாண்ட வாத்தியம் முழுங்கியது. இராணுவ உத்தியோகஸ்தர்களும் விருந்துக்கு வந்திருந்தனர். ஆயின், அங்கு பரிமாறப்பட்ட பொருள்கள் அனைத்தும் யான் சாப்பிட்டு முடியுமுன்னரே மேலும்புதிது புதிதாகப் பல தட்டுக்கள் வந்து கொண்டேயிருந்தன.

தளகர்த்தரோடு சம்பாஷணை

மாலையில் தளகர்த்தர் யெனிஸ்யில் காணவந்தார். ஹெர்மனி தேசத்தைச் சேர்ந்த ஒரு ஸ்திரீயும் அவரோடு வந்தார். அவர் ஸீனுயிற் கல்யாணஞ் செய்து கொண்டிருக்கிறார். அவர் நான் கூறியவற்றை மொழிபெயர்த்துச் சொன்னர். ஜப்பானிய வெடிகுண்டுக்காளர மேல் அவர் சமீபத்தில் தப்பினர். தளகர்த்தர் யேனுவின் நிலையை எனக்கு விளக்கிச் சொன்னர். பிறகு நான் பிரதம மந்திரியைக் கண்டேன். பிறகு அன்றிருந்து ஒரு தேக்கச்சேரிக்குச் சென்றேன். மூன்று மந்திரிகளும், பழைய மந்திரிகளும் மற்றும் பலரும் வந்திருந்தார்கள். சீனக் கடற்படையைப்பற்றி நான் அங்கு தெரிந்து கொண்டேன். சிங்கியாங்கிலிருந்து வந்த ஒருவரை நான் இந்த விருந்திற் சந்தித்தேன். அவர் அராபியிற் பேசியதைக்கூறை எனக்கு ஆச்சரியமேற்பட்டது. இரண்டொரு வார்த்தைகள் மாத்திரம் எனக்குத் தெரிந்தன. ஆமெரிக்க—ஸுவிய தேசங்களிலிருந்து வந்த பத்திரிகை நிருபர்கள் பலர் வந்திருந்தனர். சீனர்களின் பெயரை ஞாபகத்தில் வைத்திருப்பது பெருங்கஷ்டம். இதனுற்றான் சீனர் ஒருவரைக் கண்டதும் அவர் யார் என்பதை அறிவித்துக் கொள்ள ஒரு "விஸிற்றிங் கார்" கொண்டு வருகிறார்கள். இவ்வித "கார்டுகள்" பல என்னிடமிருக்கின்றன. விருந்திற் சீனப்பாஷையிற் சம்பாஷணை பலமாக நடந்தது. அன்றிரவு விமானப்படையெடுப்பு இல்லை.

'இறுதிவரை போராடவேண்டும்'

பிராங்கப் பிரதமமந்திரியின் உறுதி

பாரிஸ், அக் 7

பிரான்சிய பிரதமமந்திரி மிஸ்டர் டலாடியர் இன்று சேனட் அயல் காட்டு விவகாரக் கொம்மிஷன்முன்பு பின்வருமாறு பேசினர்:-

"அக்கிரமிப்பின் ஆட்சியை அழித்து ஒழிப்பதற்கும் ஒவ்வொரு 6 மாதத்திற்கும் தேசங்கள் பொதுப்படை திரட்டவேண்டிய அவசியத்தைப் போக்கவுமே பிரான்ஸும் பிரிட்டனும் யுத்தஞ் செய்து வருகின்றன. கொடுத்த வாக்கைக் கௌரவிக்கக்கூடிய தன்மையிலுள்ள நிரந்தரமான சமாதானமே எங்களுக்குத் தேவை. அத்தகைய சமாதானம் பிரான்சுக்கு மாத்திரமன்றி ஏனைய தேசங்கள் அனைத்துக்குமே உத்தரவாதமளிக்கக் கூடியதாக இருக்க வேண்டும். இச் சமாதானம் ஐரோப்பாவில் ஒரு நாட்டின் ஆதிக்கமெதுவும் ஏற்பட இடமளிக்காது.

மக்கள் உயிர் வாழவும் சுதந்திரமாக இருக்கவுமுள்ள உரிமைகளின் அடிப்படையாகவே இச் சமாதானம் இருக்கும்.

பிரான்ஸ்,பிரிட்டனைப்போல இந்த லக்ஷியங்கள் திட்டவட்டமாக நிறைவேறும்வரை தனது ஆயுதங்களைக் கீழே வைக்காது.

நம்மீது கமத்தப்பட்டுள்ள இந்த யுத்தத்தை நாம் தொடர்ந்து நடத்த வேண்டும். நாம் வெற்றியடையும் வரை இதை விடக்கூடாது. ஐரோப்பாவில் உண்மையான நீதியும் நிரந்தரமான சமாதானமும் ஏற்பட இந்த வெற்றி மாத்திரமே உதவி செய்யும்.

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல்வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

இந்து சாதனம்.

யாழ்ப்பாணம்: பிரமாதி ஞு புரட்டாதிமீ உகூ வியாழக்கிழமை

சமாதானம் வருமா?

சிலமாசங்களுக்கு முன்னே யுத்தம் வருமோ? வருமோ? என்ற வினாவே எவர்வாக்கிலும் இருந்தது. அவர்கள் வினாவிற்கு விடையாக யுத்தம் வந்துவிட்டது. போலன்டிலே கோரமான யுத்தம் நடந்தது; பதினெட்டு நாட்களில் போலன்டு தோல்வியுற்று ஜர்மனியராலும் ரூஷியராலும் பங்கிடப்பட்டு விட்டது. போலன்டில் யுத்தம் நிகழ்ந்து வரும்போது பிரான்ஸியரும் பிருத்தானியரும் ஆங்குச் சென்று போலன்டினர்க்குத் துணைபுரிய இயலாமையினால், மேற்கே சென்று றயின் நதி எல்லைப்புறத்து ஜர்மனியரைத் தாக்கினர்; அந்த யுத்தம் இன்றும் நடைபெறுகின்றது; ஆனால் யுத்தசமாசாரங்களை உள்ளபடி அறிந்துகொள்ள முடிய வில்லை. இப் பொழுது கிடைக்குந் தந்திச் சமாசாரங்களைக் கொண்டு, பிருத்தானிய பிரான்ஸிய ராகட்டும், ஜர்மனியராகட்டும் மேற்கு யுத்தகளத்திலே எவ்வகையான பெரும் வெற்றியை யேனும் தோல்வியையேனும் அடைந்ததில்லையென்ற ஒன்று மாத்திரம் யூகிக்கக் கிடக்கின்றது.

இனி இப்பொழுது எங்களுக்கு யுத்த விஷயமாகக் கிடைக்கும் தந்திச் சமாசாரங்களெனிலோ ஒன்றோடொன்று மாறுபடுவன; முன்னொடு பின் முரண்படுவன; சென்ற மகாயுத்தத்திலே தந்திச் சமாசாரங்கள் வாயிலாகத் தூரித்த நாடுகளில் வசிக்கும் எம்போலியர் ஒருவாறு உண்மைகளை அறியத் தக்கதாய் இருந்தது; இப்பொழுது அப்படியில்லை. யுத்த சமாசாரங்களை உள்ளபடி வெளியிடின் அவை சத்துருக்களுக்கு அநுகூலமாக விருக்குமென்றும், ஆகையால் இன்றியமையாததெனக் கண்டாலே யுத்த கர்மங்கள் வெளியிடப்படுமென்றும் பிருத்தானிய பிரதமமந்திரி சில நாட்களுக்கு முன்னர்த் தெரிவித்த ஞாபகமிருக்கின்றது. எவை எப்படியாயினும் ஈற்றில் வெல்வி தோல்விகள் உள்ளபடி அறிவிக்கப்படுமென நாம் காத்திருக்கலாம்.

இவை ஒருபுறமிருக்க போலன்டு வீழ்ந்ததின் எவர் வாயிலும் ஒருகக்கும் வினா சமாதானம் வருமோ என்பதே; இந்த வினா அகாலத்தில் எழுந்ததென்று நாம் நினைக்கவொண்ணாது; போலன்டுகாரணமாகத்தானே யுத்தம்! நேர்ந்தது, போலன்டு போய்விட்டதே, இனிச் சமாதானமாகலாமே யென்பதுதான் உலகத்தி லுள்ளவர்களுடைய கொள்கை; உலகத்தவர்களமாத்திரமல்லர் ஹிட்லரும் இப்படியான எண்ணத்துடன் இருந்தலினாற்றான் இப்பொழுது சமாதானம் பேசப் புறப்பட்டிருக்கிறார்.

ஹிட்லர் பேசத் தொடங்கிய சமாதானம் எப்படிப்பட்டதென்பதே இப்பொழுது எல்லாராலும் ஆராயப் படுவது; போலன்டு விஷயமான கருமத்தை நான் நிறைவேற்றி விட்டேன்; இன்னும் அநியாயமாகச் சனங்களெல்லாம் ஏன் சாவான், உலக சமாதானத்திற்குப் பங்கமிகழுவிட வொண்ணாது; ஆனதால் இவ்வளவில் யுத்தத்தை யொழித்துச் சமாதானத்தை ஆக்குவோம்" என்ற கருத்துப்படத்தான் ஹிட்லர் சமாதானப் பேச்சுப் பேசுகிறார். மேலும் போலன்ட் சமாதானப்பேச்சிற்கும் பிருத்தானிய பிரான்ஸியருக்கும் ஒரு தொடர்புமில்லையென்றார்; மேற்கு யுத்த முனையிலிருந்து பிருத்தானிய பிரான்ஸியர் தங்கள் கைகியத்தைக் கூப்பிட்டுவிட வேண்டுமென்கிறார்; இவைமாத்திரமா? இல்லை! இல்லை!! ஜர்மனிய குடியேற்றநாடுகளைத் திருப்பித் தங்களுக்குத் தந்துவிடவேண்டும்; தரும்படி தாம் இரந்துகேட்கப் போவதில்லை. தரா விட்டால் அவைகளைக்கைப்பற்றத்தமக்கு மார்க்கங் தெரியுமென ஹேர் ஹிட்லர்வெருட்டுகின்றார்.

இதனைக்கேட்ட ஆங்கில பிருத்தானியர், ஹிட்லர் பேச்சு சமாதானத்திற்காகிய பேச்சன்று; போர்க்கறை கூவதலாகிய பேச்சாகும், ஹிட்லர் சொல்லை நம்பிச் சமாதானம் செய்வதெப்படி? ஹிட்லர்தம்வாக்கைப் பேணுவதில்லை; சொல்வதொன்று; அவர் செய்வது பிறிதொன்று, ஹிட்லர் ஏதும் நியாயமான சமாதானம் பேசினால் அதைவிட்டு யோசிக்கலாம் என்று கூறுகின்றனர். இப்படியெல்லாமிருப்பச் சமாதானம் எப்படி வரும்?

இருபகுதியாருக்கு மிடையில் இன்னொரு தத்துவராச்சியத்தினர் தலையிட்டுச் சமாதானம் பேசவொண்ணாதாவெனில், அப்படிப் பேசக்கூடிய நிலையிலிருப்பவர் அமரிக்கரும் இத்தலையருமேயாவர். அமரிக்கர் சமாதானம் பேசப்போனால் ஹிட்லர் ஒத்துக்கொள்ள மாட்டார்; முஸோலினி சமாதானம் பேச விரும்பினால் பிருத்தானியபிரான்ஸியருக்கு அவர்மேற் சந்தேகம் பிறக்கும். இப்படியெல்லா மிருத்தலால், ஏதோ ஒரு பக்கம் பெருந் தோல்வியடைந்தாலன்றிச் சமாதானம் வரமாட்டதென நாம் காத்திருக்க வேண்டியதே. ஆனால் இந்தக் கொடிய யுத்தத்தினால் உலகம் படும்பாடு கொஞ்சமல்ல.

*

நவராத்திரி.

மனிதருந் தேவரும் மாயா
முனிவரும் வந்துசென்னி
குனிதருஞ் சேவடிக்கோமளமே
கொன்றை வார்சடைமேல்
பனிதரும் திங்களும் பாம்பும்
பகீரதி யும்படைத்த
புனிதரு நீயுமென் புந்தியெந்
நாளும் பொருந்துகவே.

நவராத்திரி நாளேத்தினம் 13-10-39 ஆரம்பமாகிறது. இக்கால மெனிலோ அன்பர்கள் மகாசத்தியாகிய, உலகமாதாவாகிய ஈசுவரியைப் பூசித்து வணங்கி அவ்விறைவியின் பூரண அநுக்கிரகத்தைப் பெறுதற்கு வாய்ந்த காலம். இப் புண்ணிய காலத்திலே நமது முதாதைகள் யந்திர குமப விம்பங்களில் மகேசுவரியை நிலையுறச் செய்து பல்லாற்றானும் பூசித்துத் தத்தம் இஷ்ட சித்திகளைப் பெற்று வாழ்ந்து வந்தனர். எங்கள் தாய் இலக்குமியாகிச் செல்வத்தைத் தருவாள்; சரசுவதியாகிக் கல்வியை வழங்குவாள். துர்க்கை காளி சாமுண்டி முதலிய திருநாமங்களைக் கொண்டு வெற்றியையும் காரியசித்தியையும் அருளுவாள்; உமையென்றால் இயல்பில் இயைமை மயமை இன்பங்களைத் தருவாள்; இறைவனுக்கு அமிசியின் மீது வைக்கக் கால் தோய்ந்த எங்கள் அன்னை முன்னாளிச் சேவேளுக்கு வேலையும், சுருவேளுக்கு மூவர் பயப்படச் செல்கோலையும், சம்பந்தப் பிள்ளையாருக்கு ஞானப் பாலையுங் கொடுத்தவள்; அழுந்தப் பிள்ளை பால்குடிக்கும் என்ற பிரகாரம் அவளுடைய குழந்தைகளாகிய நாங்களும் அழுதழுது அவளை இரந்தால் எங்களுக்கும் ஏதும் தரத்தானே வேண்டும். எங்கள் இறையை சாமானியமானவ ளல்லள்; அவளை இன்றி இறைவனாலும் எதுஞ் செய்தல் முடியாதேன்று படித்தவர் பெரியோர் சொல்லக் கேட்டிருக்கிறோம். இறைவியின் மகத்துவத்தை அறிய வேண்டின் தமிழ்ப் பிள்ளைகளாகிய நாங்கள் அபிராமியந்தாதியைப்படித்துப் பார்க்க வேண்டும். நவராத்திரி காலத்திலே அந்த அந்தாதியை அன்பர்கள் பத்தியுடன் பாராயணஞ் செய்யப் பார்த்திருக்கிறோம்.

காசியில் விசுவநாதர் பக்கத்தில் விசாலாட்சி யென்றும், காஞ்சியில் ஏகாம்பரநாதர் மருங்கில் காமாட்சி யென்றும், மதுரையிற் சோமசுந்தரர் மருங்கில் மீனாட்சி யென்றும், சிதம்பரத்தில் நடராசர் இடப்புறத்திற் சிவகாமியென்றும், அண்ணாமலையார் வரமபாகத்தில் உண்ணாமலையாளென்றும், இந்த வண்ணாபண்ணையில் வைத்தியேசுரர் பாகத்தில் வாலாம்பிகையென்றும் தையநாயகி யென்றும் புலோலியிற் பகவதீசுவரர் திருமருங்கிற் பருவதவர்த்தனி யென்றும் பல திருநாமங்களைக் கொண்டு தம் மக்களாகிய எங்கட்குச் சதா அநுக்கிரகஞ் செய்பவள் வேறு எவளுமல்லள் எங்கள் மனோன்மணி தாயே யாவள்.

இங்ஙன மெல்லா மிருத்தலால் தேவாலயத்திலே குறித்த நவராத்திரி காலத்தில் கிரமமாக ஆசாரசீலராய்ச் சென்று இறைவியை வணங்கித் துதியுங்கள்; மடாலயங்கள் வித்தியாலயங்களில் கும்பதாபனஞ் செய்து உலகமாதாவை உபாசித்துக் கும்பிடுக் கல்விச் செல்வம் பொருட் செல்வம் முதலாம் பேறுகளைத் தந்தருளும் வண்ணம் இரந்து நில்லுங்கள். இத்துய தொண்டினையும் வந்தனை வழிபாட்டினையும் பத்திபூர்வமாகச் செய்தால், இப்பொழுதுள்ள பஞ்சம் நீங்கும், யுத்தம் ஒழியும், அடிமைத்திறங் கேடும், மதுபானம் முதலிய பெருந்தீமைகள் அறவே அகன்று விடும். பதினாறு பேறும் சித்திக்கும். பெருவாழ்வு ஓங்கும்.

———

இராமநாதன் கல்லூரியும்

இராமநாதன் ஆசிரிய கலாசாலையும்.

இப்போது கொழும்பில் "பிறிமெடிக்கல்" பரீட்சையிற் சித்தியெய்திய செலவி மங்கையர்க்கரசி கனகசபை என்பார் 8 வருஷங்களுக்கு மேலாக இராமநாதன் கல்லூரியில் ஒரு மாணவியாகக் கல்விகற்றவர். இப்பரீட்சையிற் சித்தியெய்தியோரில் இவர் ஒருவரே பெண்ணாவர்.

இவ்வருஷம் இராமநாதன் ஆசிரியகலாசாலையிலிருந்து கீழ்க் காணும் பெண்கள் இரண்டாம்பிரிவுப் பயிற்சி பெற்ற தமிழ் ஆசிரியத் தராதரப் பரீட்சையிற் சித்தி பெற்றனர்.

பாக்கியவதி அம்மாள் பரமசாமி
தெய்வானை கந்தையா [ளை
சௌபாக்கியலட்சுமிவேலாயுதபிள்ளை
சொர்ணம் ராசா
யோகரத்தினம் இளையதம்பி
வள்ளியம்மை சீனியர்
சிவபாக்கியம் அருளம்பலம்
சிலகாமி சினனக்குட்டி
செல்லம்மா முருகுப்பிள்ளை
மங்கம்மா ஆறுமுகம்
மீனாம்மா ஆறுமுகம்

பின்வருவோர் புகுமுவிஷனல் தராதரப் பத்திரம் பெற்றனர்.

ஜயமணி சிதம்பரப்பிள்ளை
அமிர்தம் வீரகத்தி
செல்லம்மா சின்னையா
தங்கலக்ஷ்மி பொன்னம்பலம்
சத்தியபாமா கந்தையா
தங்கம் முருகேசு
நாகரத்தினம் வேலுப்பிள்ளை
சின்னத்தங்கம் இராமலிங்கம்

வெறும் வாக்குறுதி போதாது

'பிரிட்டன் இந்தியாவுக்கு அளிக்கும் வாக்குறுதியைச் செயலில் நிறைவேற்றுக'

காங்கிரஸ் மகாசபையின் வேண்டுகோள்

கு. இ. கா. நிர்வாகசபைக் கூட்டம் இன்றுபிற்பகல் ஆரம்பமாயிற்று. வெளியிலிருந்து பார்க்கப் போகின்றவர்கள் அநுமதிக்கப்படாதலால், கூட்டம் மிகுந்த அமைதியோடு காணப்பட்டது. ராஷ்டிரபதி பாபு ராஜேந்திரப் பிரசாத் இப்பொழுதுள்ள நிலைமையை விளக்கிப் பேசியதாவது:

சீறிய வல்லாக்களை நாஸிஸம் அக்கிரமஞ் செய்துகொள்ளாமல் அவற்றைப் பாதுகாப்பதே இப்பொழுது நடைபெறும் யுத்தத்தின் நோக்கமெனக் கூறப்பட்டதெனக் கறப்படுகிறது. அவறியும் நாகேள்நீது நமக்குள்ள அநுதாபம் முன்போலவே தொடர்ந்து இருந்து வருகிறது. ஆயின், இப்பொழுதைய யுத்தத்தின் இலட்சியந்தான் என்ன? இது ஜனாயகத்திற்கு ஆதரவளிப்பதற்காகவா அல்லது சென்ற மகாயுத்தத்தைப்போல் இதுவும் இருக்கப் போகிறதா? இக் கேள்விக்கு நமக்கு மறுமொழி கிடைத்தாலொழிய, நாம் நம்முடைய போக்கைப்பற்றி ஒருவித முடிவுஞ் செய்ய முடியாது.

யுத்தத்தின் நோக்கங்கள் எவை? இந்தியா சம்பந்தமாகப் பிரிட்டனின் போக்கு எது என்பதைப் பற்றித் தெளிவானதும் முரண்பாடற்றதுமான முறையில் பிரிட்டன் கூறவேண்டியது அவசியமாகுமென நாம் நமது அறிக்கையிற் றெளிவாக எடுத்துக் கூறியுளோம். வெறும் வாக்குறுதி நமக்குத் திருப்தியை அளிக்க முடியாது. நாம் ஒரு சுதந்திர நாட்டினராக நடத்தப்படவேண்டும். நமது அறிக்கையை ஆகில உலகமும் தாராளமாய் வரவேற்றிருக்கிறது. இந்தியா சம்பந்தப்பட்டவரையிலும், ஜனநாயகத்திற்குப் பாதுகாப்பு அளிப்பதைப் பற்றிப் பிரிட்டனின் உறுதி மொழிக்கு நிதர்சனமான பிரிட்டன் தெளிவாகத் தனது வாக்குறுதியைக் கிரியாம்சையிற் செய்து காட்டுவதில் பிரிட்டனுக்கு ஒருவித சங்கடமும் இருக்காது."

அடுத்த மகாநாடு

பயங்கரமான சர்வதேச நிலைமையை முன்னிட்டுக் காங்கிரஸின் அடுத்த மகாநாட்டுக் கூட்டம் மார்ச் மாதத்திற்குத் தவணையிட்டு வைக்கப்படவேண்டுமென்ற தீர்மானத்தைப் பாபு ராஜன் பிரேரித்தார். இத்தீர்மானம் விசேஷ மகாநாடு நடத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டால் காரியநிருவாகசபை அவசியம் போல், டிசம்பர் மாதத்திலாவது அல்லது வேறு எந்த மாதத்திலாவது விசேஷ காங்கிரஸ மகாநாட்டை நடத்தக் காங்கிரஸ் காரிய நிர்வாகசபைக்கு அதிகாரமிருக்கிறது.

அத்தகைய விசேஷ மகாநாடு நடத்தப்பட வேண்டிய இடம் இந்த முதலியவை சம்பந்தமாக இதரிர மானம் காரிய நிருவாகசபைக்கு அதிகாரமளிக்கிறது.

வரர்தாகஞ் அக் 9

இன்று பிற்பகல் கூடப்போகும் அகில இந்திய காங்கிரஸ் நிருவாகசபைக்கூட்டத்தில் சமர்ப்பிப்பதற்காகக் காங்கிரஸ் காரிய நிர்வாகசபை ஒரு தீர்மானத்தை கிறைவேற்றியிருக்கிறது.

குறித்த தீர்மானத்திற்குப் பிற்பகல் அங்கீகாரங் கோரப்படும்.

தீர்மானத்தின் கருத்து

பிருத்தானிய அரசாங்கத்தின் யுத்த லக்ஷியங்களும் சமாதானகால லக்ஷியங்களும் எனனவென்பதைத் தெளிவாக்க வேண்டுமென விரும்பிச் செப்டம்பர்மீ 14 ந்திகதி காரியநிருவாகசபை விடுத்த அறிக்கையின் கோரிக்கைகள் இத்தீர்மானத்தில் அடங்கியிருக்கின்றன. குறித்த தீர்மானத்தைக் கிரியாம்சையிற் கொண்டு வருதற்கான அதிகாரத்தையும் அகில இந்திய காங்கிரஸ் நிர்வாகசபை அளிக்க வேண்டுமென்று கோரப்படுகிறது.

வகுப்பதிய ஆசை அதை உருவுகமாக்கும் சக்திகள் ஏகாதிபதிய வெறியால் விளையும் யுத்தம் ஆகியவைகளைக் காங்கிரஸ் ஆதிமுதல் எதிர்த்து வந்திருப்பது பற்றிக் கூறமேலும் அதிர்மானம் தெரிவிப்பதாவது:—

காங்கிரஸ் பன்முறை வற்புறுத்தியிருக்கிறபடி, இந்தியாவின் சம்மதமின்றியே யுத்தத்தில் அகில இறங்கும்படி செய்து பிரகாரமான விளைவுகளை உண்டுபண்ணக்கூடிய கடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, புதுப்புதுச் சட்டங்கள் இயற்றப்பட்டு விட்டன. மாகாண அரசாங்கங்களின் அதிகாரங்கள் இவைமூலம் குறைக்கப்பட்டு விட்டன.

அகில இந்திய காங்கிரஸ் நிருவாக சபை கடபடிலாக ஒன்றையுஞ் செய்துவிட விரும்பவில்லை. யுத்த லக்ஷியங்கள் சமாதான லக்ஷியங்கள் ஆகியவை பற்றிப் பிருத்தானியர் தெளிவாக்குவதற்கு ஒரு சந்தர்ப்பம் அளிக்க வேண்டுமென்று அதநினைக்கிறது. சிறப்பாக இந்தியா சம்பந்தமாகப் பிரிட்டனகொண்ட கொள்கை பற்றித் தெளிவாக அறிந்து கொள்ள விரும்புகின்றது.

நாஜி அக்கிரமிப்பை நிருவாகசபை கண்டிக்கிறது. ஆயினும் குடியேற்ற நாடுகளுக்கெல்லாம் ஜனநாயகம் அளிக்கப்பட்டால்தான் சுதந்திரமும் சமாதானமும் நிலைக்குமெனநிருவாகசபை நினைக்கிறது.

இந்தியா ஒரு சுதந்திர நாடெனப் பிரகடனஞ் செய்யப்படவேண்டும். பிரிட்டன் இவ்விதம் கொள்கைகளைக் கி ஓர் அறிக்கையை வெளியிடுமென விரைவில் நிருவாகசபை எதிர்பார்க்கிறது.

ஜனநாயகம், ஒற்றுமை, சிறுபான்மையோர் உரிமை இவைகளை அடிப்படையாகக் கொண்டு இந்திய சுதந்திரம் நிகழ வேண்டுமென மீண்டும் நிருவாகசபை அழுத்தமாகக் கூறுகிறது.

கடிகாரத் திருடனுக்கு ஒரு மாதம்

பெரியகடையில் கடை வைத்திருக்கும் எம். ஏ. அலிசாவெமன் என்பவரிடமிருந்து ஒரு கைக்கடிகாரத்தைக் களவாடினதாகக் காலியில் வசிக்கும் பண்டாமீது தொடரப்பட்ட வழக்கில் எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டிருந்தமையால் உதவி நீதிபதி திரு. R R. ஸல்யா எதிரிக்கு ஒரு மாத மறியற்றண்டனை விதித்தார். ந. தி.

தூங்கியிறந்த வழக்கறிஞர்

இறந்த அறையில் 4 காகிதங்கள்

சாவகச்சேரியைச் சேர்ந்த நியாயதுரந்தரர் திரு. M. M. கனகசிங்கம் நேற்றுக்காலை 8 மணியளவில் தனது இல்லத்திலுள்ள படுக்கையறையிற் தூங்கி இறந்தமை அறிகிறோம். இவர் இறந்த அறையில் நாலு காகிதங்கள் கண்டெடுக்கப்பட்டன. இச் சம்பவம் சாவகச்சேரிப் பொலிசாருக்கு அறிவிக்கப்பட்டுப் பொலிசார் அவரு சென்று விசாரணை செய்தாவறிகிறோம். இச் சம்பவம் நடந்த நேரத்தில், அவருடைய மனையியார் திருவெல்வேலியிலுள்ள தமது வீட்டில் இருந்ததாக வறிகிறோம். ந. தி.

உலகம்பலவிதக்கதை

(மூன்றும் பக்கத் தொடர்ச்சி)

நேரம் 10 மணிவரையிலிருக்கும், அங்கே வந்த ராமன் ஒரு புகையிலை பத்திரிகையையும் ஒரு கடிதத்தையும் கொண்டு வந்து புன்சிரிப்புடன் இராசசேகரன்கையிற் கொடுத்தான்; "தபாற்காரன் வந்துவிட்டானோ!" என்று அவன் கேட்க ராமன் "ஓம் ஐயா, அவன் இங்கு வரும் வழியில் எங்கிங்கு கண்டு இவைகளைத்தந்துவிட்டுப் போனான்" என்று சொல்வதற்கிடையில், இராசசேகரன் அக்கடிதத்தினுள்ள மேல்லாசத்தை அவதானித்துப் பார்த்து இன்னுரென்பதை விளங்கிக் கொண்டு "ராமன், இது யாருடைய கடிதமாக விருக்குமென்று நினைக்கிறாய்" எனக் கேட்க 'வேறு ஆருடைய கடிதமையா, அந்த அம்மாளுடைய....." என்று சொல்வதற்கிடையில் "பெலத்துப் போசாதே" என இராசசேகரன் சைகைகாட்ட இராமன் அவ்வளவிலிட்டு விட்டான். இராசசேகரன் கைநடுங்க, மனம் பதற, ஆவலுடன் கடிதத்தை மெல்லத்திறந்து பார்ப்பானுயினுன்; அக்கடிதத்திற் பின்வரும் கருத்தமைய எழுதப்பட்டிருந்தது.

உ

"எனது ஆருயிரே,

தங்கள் ஓதரவும் ஆதுதலும் மெய்யன்பும் லிரவ எழுதிய அருமையான கடிதம் பெற்றேன்; நீடித்த நாட்களாகத் தங்கள் திருமுகத்தைக் காணவில்லையே என்று வாடிவதங்கியிருந்த எனக்கு அந்தக் கடிதம் தாங்கள் கேளி இங்கு வந்ததுபோல் ஆநந்தத்தை அளித்தது. உங்களுடைய காமாவின் மரணத்தைப் படித்துப் பெரிதும் கவலைப்பட்டேன்; முதன் முதல் நீங்கள் எனக்கு எழுதகோந்த கடிதத்தில் இப்படியான மரணசங்கதியைப் படிக்கவேண்டி வந்துவிட்டதேயென்பதை நினைத்துச் சற்று வியாகுலமானேன்; ஆனுல் எங்கள் இருவருக்குமிடையில் மெய்யன்பு வேருன்றிப் படர்ந்திருக்கும் போது ஒருவித்தமான கவலையும் வரமாட்டாதென்று நம்புகிறேன்; எங்கள் கல்லூரி விடுதலை முடிந்து தொடங்குவதற்கு இன்னும் ஒரு வாரம் இருக்கிறதென்று நீங்களும் அறிவீர்கள்; இதற்கிடையில் உங்கள் வரவை என்பேற்றும் ராணுடைய ஆவலுடன் எதிர்பார்த்தவண்ணம் இருக்கிறேரும், இடையிலுள்ள சில நாட்கள் ஒவ்வொன்றும் எனக்கு ஒவ்வொரு மாசம்போலாகி மெல்ல மெல்லக் கழிகின்றன; வருபோது நீங்கள் இராமனையும் கூட்டிக் கொண்டு தான் வருவீர்களேண்டு காத்திருக்கிறேன்; நான் படிக்கும் விஷயமோ நடந்து கொள்ளவேண்டிய எந்த விஷயமோ அவைகளை நீங்கள் இவ்விடம் வந்தபிறகு உங்களைக் கேட்டு உங்கள் கட்டளைப்படி தான் செய்யுநடந்து கொள்ளு இருக்கிறேன். என்பேற்றும் அப்படியே எனக்குச் சொல்லியிருக்கிறார்கள்; நீங்கள் இவ்விடம் வருமட்டும் உங்கள் கடிதந்தான் எனக்கு ஆறுதல் என்பதை மறந்துவிட மாட்டீர்கள்; எல்லாம் வல்ல இறைவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. உங்களுக்கு என்றும் மனப்பூர்வமான வணக்கம் உரியதாக.

இங்ஙனம்,
உங்கள் வரவை ஆவலுடன்
எதிர்பார்க்கும்
அன்பிற்குரிய அடியவள்
இ. சோர்ணம்பிளை

இக்கடிதத்தை இராசசேகரன் இராமன் கிற்கின்றானென்பதை பாராமல், ஆசை வெட்கமறியாதென்றபடி, ஒருமுறை இருமுறை மும்முறை பன்முறை படித்து ஒவ்வொருமுறை இறுதியிலும் முடிவிட்டான். ஆனுலும் அக்கடிதத்தின் இறுதியிலுள்ள சில வரிகளும், கையெழுத்திடும்போது எழுதப்பட்டிருந்த இ என்ற எழுத்தும் அவனைத் கிடுக்குறச் செய்தன. அதனை ராமனும் அவதானித்துவிட்டான்; இதற்கிடையில் அவனுடைய தாயார் "தம்பி, உது ஆருடைய தம்?" என்று வினவுதலும், "அம்மா என்னுடன் கடப்படிக்கும் ஒரு தோழியின் கடிதம்" என்று பதில் கூறினுன்; "கூடப்படிக்கும் பிள்ளை கடிதம் என்றது மெய்" என்று மனம் மெல்லச் செல்லச் சிரித்தாள்.

(வரு

தந்திச் சமாசாரம்

யப்பானியர் வெற்றி

7-10-38

நியாகஷ மாகாணத்தில் சியுஷி மலைப் பள்ளத்தாக்கில் யப்பானியர் சீனரைத் தாக்கி அவர்களுடைய சைநியத்தில் 8 அணியினைச் சூழ்ந்து பெருது புறங்கண்டனராம். யுத்த முனையில் 7000 சீனர் மாண்டு கிடக்கக் காணப்பட்டனராம்.

ஜப்பானியருக்கு நேர்ந்த பெருத்தோல்வி

யப்பானிய வீரரில் முப்பதினுயிரம் பேர் மாண்டனராம்

சாய்ங்ஷா என்னுமிடத்தில் நடந்த யுத்தத்திலே யப்பானியர் முன்னெறு போதும் அடையாத பெருந் தோல்வி படைத்தன்றெனச் சொல்லப்படுகின்றது. 30,000 யப்பானியர் மாண்டனராம். யுத்த முனையில மாத்திரம் 6000 யப்பானியப்பிரேதங்கள் காணப்பட்டனவாம்.

ஹிட்லரின் சமாதானப்பேச்சில் நம்பிக்கை வைக்கவேண்டுமு

8-10-39

பிருத்தானிய அதிகாரியாகிய மிஸ்டர் சுடன சொல்வது:- "ஹிட்லருடைய அக்கிரமத்தை அறவேழிந்தவிடல் வேண்டும்; பெரிய ராச்சியமாக சிறிய ராச்சியமாக எந்த ராச்சியமும் சுவாதீனத்தோடு வாழச் செய்தல் வேண்டும். நாங்கள் பகைமை காரணமாக, இல்லையேல் மண்ணுசை காரணமாக யுத்தத்திற்குப் புறப்படவில்லை. சுவாதீனத்தை ஆக்குவதற்காக எங்கள் முழுப் பெலத்தையும் அர்ப்பணஞ் செய்ய ஆயத்தமாக விருக்கிறோம்.

"நாங்கள் சிறிதும் இடங்கொடுக்கக்கூடாது

பிரான்ஸிய பத்திரிகைகளின் கூற்று:—

[illegible] நினைத்து நாங்கள் சமாதானத்திற்கு இடங் கொடுக்கக்கூடாது. ஹிட்லரின் சமாதானப் பேச்சு நிலையானதல்ல; அநியாயமாகத் தம் சனங்கள் என் மாண்டு போவான என்று எண்ணியே ஹிட்லர் இப்பொழுது நியாயம் பேசுகிறார். இந்தச் சமயத்திலே ஹிட்லருக்கு இடங்கொடுத்தால் ஹங்கேரி, யுகோஸ்லேவியா, ரூமேனியா, டென்மார்க், சுவிற்சர்லாந்து, பெல்ஜியம், ஹொலண்டு முதலிய நாடுகளுக்கும் நேற்றல் எங்கள் நாடுகளுக்கும் முடிவுவந்து சேரும்.

ஹிட்லரின் சமாதானப்பேச்சுக் கண்டிக்கப்படுதல்

மிஸ்டர் ஆதர் ஹென்டேர்சன் என்னும் பிருத்தானிய அதிகாரி சொல்வது:- "ஹிட்லர் நீர்க்க சமாதானப் பேச்சுப் பேசுவதாயக் காணவில்லை; அவர் தாம் செய்த அக்கிரமங்களைப்பற்றி ஒன்றுங் கூறவில்லை; ஹிட்லர் நீதியோடு கூடிய நிர்க்கமான சமாதானத்தைப் பேசினுல் நாங்கள் அவைகளைப் பற்றி யோசிக்க இடமுண்டு.

மேற்கு யுத்தமுனை ஜர்மனியர் செய்யும் பெரும் ஆயத்தம்

9-10-39

ரயின்நதி நிரத்தில் கன்ஸ் ரன்வாலி தொடக்கம் பாஸில் வரையில் ஜர்மனியர் சைநியங்களைக் கொண்டு வந்து நிறுத்தி[illegible] ஹிட்லருடைய சமாதானப் [illegible] முடிவைக்கண்டபின் தன் [illegible] ஜர்மனியர் சைநியம் பிரான்[illegible] தாக்கத் தொடங்குமென எண்ணுகின்றனர். ரயின்நதியோரத்திலுள்ள நகரங்களில் 16 மைல் தூரத்திற் குடியிருக்கும் சனங்களெல்லாரும் அந்த இடங்களிலிருந்து வேறு ஊருக்குப்போய்விடவேண்டுமென அதற்றப்படுகின்றனர்களாம்.

மேற்கு யுத்த முனையிலே ஜர்மனிய காவற்படைகள் மிகவும் முயற்சியுடன் திரிகின்றனவாம். ஸைகிறென் என்னும் நாட்டிற் [illegible] ப்பிரவேசித்தலே ஜர்மனியபடையின் நோக்கமென்று எண்ணப்படுகின்றது.

கல்யாணத் தகராறு

மூத்த பெண்ணு? இளையவளு?

மணமகனது முறைப்பாடு

பாணந்துறை, அக். 9.

மகாபெல்லனையைச் சேர்ந்த ஐசுபநேரின் என்ற ஆபிரஹாம் பெறேரா என்ற வாலிபரை மோசடியாக மணமாற்ற முயற்சித்தாரென்ற குற்றச் சாட்டின்மீது, அருக்கோடையைச் சேர்ந்த ஏ. மாதியாஸ் பெறேராமீது பாணந்துறை நீதிபதி சம்மன்ஸ் பிறப்பித்தார்.

மதியாஸ் பெறேரா சென்ற ஜூலை 16ல் தனது இரண்டாவது குமரியை மணமகராக்க சுபமிகுசுக்கு விவாகஞ் செய்து கொடுப்பதாக உறுதிகூறியிருந்ததாகவும் ஆயின், சென்றஆகஸ்ட் 28இல் அரக்கோடையில் வதிரி தனது மூத்த குமரியைக் கூட்டிக்கொண்டு வந்துவிட்டு மணமாருக்கு அவரைத்தான், விவாகஞ் செய்து கொடுப்பதாகத்தான் உறுதி கூறியிருந்ததாகக் குறிப்பிட்டு மணமாரை மாற்ற முயற்சித்தாரெனச் சுபமிகுசு கோட்டிற் கூறினுர்.

வைஸ்ராயின் சுறுசுறுப்பு மற்றும் சில தலைவர்களுக்கு அழைப்பு

அலகாபாத், அக். 7—

அலே இந்திய மிதவாத சம்மேளனத்தின் தலைவர் திரு. பி. என். சாப்ருவுக்கு வைஸ்ராயிடமிருந்து ஓர் அழைப்புக் கிடைத்திருக்கிறது. இம்மாதம் 13ந் திகதி வெள்ளிக்கிழமை தன்னை வந்து சந்திக்கும்படி திரு. சாப்ருவை வைஸ்ராய் கேட்டுக் கொண்டார். திரு சாப்ரு இவ்வழைப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறார்.

வங்க முதன்மந்திரியின் புறப்பாடு

கல்கத்தா, அக். 8—

வைஸ்ராயின் அழைப்பிற்கிணங்க, வங்க முதன்மந்திரி ஜனுப் பஸ்லுல் ஹக் இன்றிரவு டில்லிக்குப் புறப்பட்டுச் சென்றிருர்.

ஸே. பன்னீர்ச் செல்வத்திற்கு அழைப்பு

சென்னை, அக். 8—

ஸே. வ. டி. பன்னீர்ச் செல்வத்திற்கு வைஸ்ராயிடமிருந்து ஓர் அழைப்புக் கிடைத்திருக்கிறது. இம்மாதம் 13ந் திகதி காலை 10-30 மணிக்குச் சந்திக்குமாறு ஸே. பன்னீர்ச் செல்வம் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறுர்.

சமஸ்தானப் பிரதிநிதிகளுக்கு அழைப்பு

புதுடில்லி, அக். 8—

சமஸ்தானுதிபதிகள் மறைமத்தின் சான்ஸலருடைய சில சமஸ்தானங்களின் பிரதிநிதிகளை வைஸ்ராய் டில்லிக்கு வந்து தன்னைச் சந்திக்கும்படி அழைத்திருப்பதாகத் தெரிகிறது.

விபசார விடுதி நடத்திய தாகக் குற்றச் சாட்டு

ஒருதிக்கு 200 ரூபா அபராதம்

புறக்கோட்டையிலுள்ள டாமன்ட் ரீட்டைச் சேர்ந்த ரகுமத் உம்மா என்றமாது விபசார விடுதி ஒன்றை நடத்தியதாகப் புறக்கோட்டைப் பொலிஸாரால் குற்றஞ் சாட்டப்பட்ட வழக்கில் திங்கட்கிழமையன்று கொழுபு முனிசிப்பல் கோட்டில் 200 ரூபா அபராதமும் அதைக்கொடுக்கத் தவறினுல் 3 மாதக் கடுங்காவற் றண்டனையும் விதிக்கப்பட்டாள்.

எதிரி முன்னரும் இதுபோன்ற குற்றத்திற்காக 100 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டதாக ஒப்புக் கொண்டாள்.

திருட்டுத்துணிகளை வைத்திருந்தோனுக்கு ஆறுமாதம்

கியிரகெருவில் வசிக்கும் சின்னப் பிள்ளையின் சளவுபோன துணிகளை வைத்திருந்ததாக ஆனைக்கோட்டையில் வசிக்கும் கணபதி செல்லன் குற்றஞ் சாட்டப்பட்ட வழக்கில் எதிரிக்கு உதவி நீதிபதி திரு. R. R. கல்லையா ஆறுமாத மதியற்றண்டனை விதித்தார். க. கி.

இந்தியர் விஷயம்

இந்திய அரசாங்கத்தின்உறுதியானபோக்கு

அயிரோப்பியசங்கத் தலைவர் கூறும் அபிப்பிராயம்

இலங்கை ஐரோப்பிய சங்கத்தின் தலைவர் மிஸ்டர் ஜி. சி. என். கெர் இங்கிலாந்தில் ஒரு விடுமுறையைக் கழித்தபின் சென்ற ஞாயிற்றுக்கிழமையன்று இலங்கை திரும்பினுர்.

ஒரு பத்திரிகை நிருபர் அவரைப் பேட்டிகண்டு பேசிய பொழுது, பிருத்தானிய ஏகாதிபத்தியம் யுத்தத்தில் ஜெயம் பெறும் வரையிலும் தேவையற்ற சகல சட்ட திட்டங்களையும் அரசியற் சீர்திருத்தக்கோரிக்கைகளையும் ஒரு பக்கத்தில் ஒதுக்கி வைக்கவேண்டுமெனத் தாம் கருதுவதாகக் குறிப்பிட்டார்.

இந்தியத் தொழிலாளரை நாடு கடத்தும் திட்டம் சம்பந்தமாகக் கேட்ட கேள்வி ஒன்றிற்கு அவர்பதிலளிக்கையில், இக்கேள்வி சம்பந்தப்பட்ட இந்திய அரசாங்கத்தைச் சேர்ந்த ஓர் உயர்தர அதிகாரியுடன் தாம் பிரயாணஞ் செய்யவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டதாகவும் அவரிடமுள்ள இந்தியக் காரியாலயத்திற்குச் சென்றுரெனவும் தாம் இது விஷயங்களை அவரோடு கலந்து பேசக்கூடிய சந்தர்ப்பங் கிடைத்ததெனவும் குறிப்பிட்டார்.

மேலும் அவர் கூறியதாவது:—

இது சம்பந்தப்பட்டவரையில், இந்தியாவின் அபிப்பிராயம் திட்டவட்டமாவதா யிருக்கிறதென நான் அறிகிறேன். தவிர, இலங்கை விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையை அநுஷ்டிக்கும்வரை இந்திய அரசாங்கமும் தனது போக்கை மாற்றிக்கொள்ளாது. இலங்கை இது விஷயம் சம்பந்தப்பட்ட கொள்கையில் தேவையற்ற முறையில் தடபுடலாக நடந்து கொண்ட இந்தியாவில் இது விஷயத்தோடு சம்பந்தப் பட்டவர்கள் கருதுகின்றனர். தவறு செய்யும் இளைய சகோதரனை மூத்த சகோதரன் நிதானமாய்க் கண்டிப்பதுபோன்ற கொள்கையை இந்திய அரசாங்கம் அனுஷ்டித்து வருகிறதென்றும், இலங்கை ஏதாவது வரவை செய்து இப்பேரு[illegible]ளுள் நெருக்டியைத் தவிர்த்தால் பொறியப் பதிலுக்குப் பதில்நீட்டிப் எததகைய ஆலோசனையையும் பற்றக் கவனஞ் செலுத்த இந்திய அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் நான் அபிப்பிராயப்படுகிறேன்.

காரியநிர்வாகசபையின் யுத்தத் தீர்மானம் நிறைவேறியது

ஸ்ரீசுபாஷ் சந்திரபோஸ் வைஸ்ராயுடன் சம்பாஷணை

வார்தா அக் 10

யுத்த நெருக்டி சம்பந்தமாகக் காங்கிரஸ் காரிய நிர்வாகசபை கொண்டுவந்த தீர்மானம் அதில் இந்திய காங்கிரஸ் கிருவாகசபையில் நிறைவேறியது. 188 பேர் தீர்மானத்தை ஆதரித்தும் 58 பேர் எதிர்த்தும் வாக்களித்தனர்.

இதற்குமுன், அபேதவாதக் கட்சியினருடைய கிருத்தத்தை அகில இந்திய காங்கிரஸ் கிருவாகசபைகிராகரித்தது. 181 பேர் கிருத்தத்தை எதிர்த்தும் 64 பேர் ஆதரித்தும் வாக்களித்தனர்.

சர்தார்படேல் பிரேரித்த தீர்மானத்தின்மீது விவாதம் நடக்கவில்லை.

காங்கிரஸ் வருடாந்தக் கூட்டத்தை அடுத்த வருடம் மார்ச் மாதத்தின் மத்தியிற்கூடுவதற்காகத் தலைமையிட்டு வைக்கக் கோரிய காரிய கிருவாகசபைக் கூட்டத் தீர்மானம் கிறைவேறியது.

இன்றைய கூட்டத்தின் நடவடிக்கைகள் துணுக்கமாக இருந்தன.

வைஸ்ராயுடன் ஸ்ரீசுபாஷ் போட்டி

இன்று காலை புதுடில்லிக்கு வந்த ஸ்ரீசுபாஷ் சந்திரபோஸ் வைஸ்ராயைப் பேட்டி கண்டார்.

ஒக்கிய தேசிய விபரல் சம்மேளனத்தின் அக்கிராசனரான ஸோ. சிமன்லால் செட்டல்வாடுக்கும் ஸோ. கோவாள்ஜீ ஜஹாங்கிருக்கும் வைஸ்ராயைப் பேட்டி காணுமாறு அழைப்பு வந்திருக்கிறது.

தேகவியோகம்

ஸ்ரீமதி பொ. தங்கம்மாள்

ஆவரங்காலைச்சேர்ந்த சுதேசவைத்தியர் திரு. பொன்னையாவின் புத்திரியும் சுதேச வைத்தியர் திரு. நாகலிங்கம் பொன்னம்பலம் அவர்களின் பாரியாருமாகிய ஸ்ரீமதி தங்கம்மாள் சென்ற செவ்வாய்க் கிழமை யன்று (10-10.39) இரவு ஒரு மணி வரையில் தேகவியோகமாயினர் என்னுந் துக்கச் செய்தியை இங்குக் குறிக்க வேண்டியவர்களாகின்றோம். இறக்கும் போது இவருக்கு வயது 30.

இவரைப் பிரிந்து வருந்தும் சுற்றமித்திராதியர்க்கு எமது மனமார்ந்த அநுதாபம் உரித்தாகுக. —கடி.

இந்துசாதனப் பொன்விழா நிதி

	ரூ.	ச.
28—9—39 வெளிவந்த இதழின்படி	1167	38
திரு. K. முத்தையா, ஆஸ்பத்திரி, ரைபிங்	2–15	
,, T. சின்னத்துரை, அளவுக்கடோர், சிங்கப்பூர்	2–00	
,, S. வைத்தியலிங்கம், P W D முவார்	5–00	
,, M. பெரியதம்பி, ஆஸ்பத்திரி, சிலியான்	1–89	
,, K. சின்னத்துரை, பென்சனர், வல்வெட்டித்துறை	1–00	
,, M. கந்தையா ,, அரர்லிமேற்கு	1–00	
கீழ்வருவன முதலியார் பொ. இராஜகோபால் அவர்கள் தனுப்பியவை.	சேர்த்	
,, S. பொன்னம்பலம் வண்கிழக்கு	2–00	
,, A. B. கனகரத்தினம் ம. சி. அநுராசபுரம்	2–00	
,, S. வேல்முருகு, பிறக்ரர் ,,	2–00	
,, V. இராமசுவாமி ,, ,,	2–00	
,, T. முத்துக்குமாரு ,,	1–00	
,, T. செல்லத்துரை ,,	1–00	
ஸ்ரீமதி. R. சிவகாமியம்மா வதுனை	1–00	
ஆகக்கூடிய வரவு	1191–42	

மேலேகாட்டப்பெற்ற அபிமானிகட்கு நன்றிகூறி எனைய அபிமானிகளையும் குறிப்பிடுவோருடு முன்ற பொருள் உதவும் வண்ணம் விநயத்துடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

ச. அருணலிங்கம்,
மனேஜர்.

ம. வே. திருஞானசம்பந்தன்,
பத்திராசிரியர்.

கேரள வெப் சோப்

சருமத்திற்கு உற்சாகம் விளைக்கக் கூடிய உயர்தரமானது

அழகான பெண்களுக்குரிய சோப்

எங்கும் கிடைக்கும்

ஏஜென்ஸ்: தேவார் அன் கம்பனி, மெயின் ஸ்ரீட், கொழும்பு

Mis 159, 71-11-38—

ரேடியோ கேட்பவர்களைப் பிடிக்க

ஜெர்மன் இரகசியப் பொலிசாரின் சூழ்ச்சி

பாரிஸ் அக் 5

"பாரிஸ் சோயிர்" என்ற பத்திரிகைக்கு ஜூரிச்சிலிருந்துவந்த செய்தி கூறுவதாவது:-

"அந்நிய நாடுகளிலிருந்து ஒலிபரப்பப்படும் செய்திகளைக் கேட்கக்கூடிய ஜெர்மனியரைப் பிடிக்க ஜெர்மன் இரகசியப் பொலிஸார் புதிய தந்திரத்தைக் கையாண்டு வருகின்றனர். எல்லா ஐரோப்பிய ரேடியோ நிலையங்களிலிருந்தும் ஒலி பரப்பப்படும் செய்திகளைக் கேட்கும் சக்திவாய்ந்த பழைய ரேடியோக்கள் மலிவாக விற்கப்படும்" என்ற விளம்பரம் ஜெர்மன் தினசரிப்பத்திரிகையொன்றில் வெளியிடப்பட்டிருக்கிறது. அக்கடைக்கு வருகிறவர்களெல்லோரும் ரேடியோ வாங்குபவர்களாக்கருதப்பட்டு அவர்களை 2 பொலிஸ் காரர்கள் பிடித்துக் கொள்ளுகின்றனர்.

கந்தரடைன்

கூந்தல் தைலம்

கூந்தலுக்குச் சிறந்த கோலத்தையும் பலத்தையும் அளிப்பது

தலை அசடுகளைப் போக்குவதிலும், கூந்தலை மென்மையாக்குவதிலும் காலமல்லாத காலத்தில் உண்டாகும் நரையையும் கூந்தலிலும் உச்சித்தோலிலும் உள்ள மற்றைய நோய்களையும் மாற்றுவதிலும் சித்திகரமானது

பெங்கால் கெமிக்கல்

கல்கத்தா பம்பாய்

ஏஜென்ஸ்: தேவர் அன் கொம்பனி மெயின் ஸ்ரீட் கொழும்பு

Mis 159. 10-9-37

அடைவுநகை விற்பனவு விளம்பரம்

1893ம் ஆண்டின் 8ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின்படி லைசென்சு பெற்ற அடைவு பிடிக்கும் யாழ்ப்பாணம் கொக்குவில் மேற்கு த. பொன்னையாபிள்ளை அவர்களிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி மேற்படி சட்டத்தின் 12ம் பிரிவினபடி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:-

1936ம் ஆண்டு மாசிமாதம்

நம்.	தீ.	ந.	ச.	பெயரும் ஊரும்.	நகையின் விபரம்.
1063	14	16		சுப்பையா நடராசா தாவடி	சிகப்புக்கல் காதோலை சோடி 1
				1937ம் ஆண்டு மாசிமாதம்	
1442	2	9		சுப்பர் வழித்திலிங்கம் கொக்குவில் மேற்கு	தாலிக்காய் ஒன்று
1597	21	17		சுப்பையா நடராசா தாவடி	சிகப்புக்கல் காதோலைசோடி ஒன்று
				பங்குனி மாதம்	
1665	1	69		நாகன் மருதன் மாகியப்பிட்டி	உள்கருந்நுக் கொடி ஒன்று தாலி சன்னக் ரயுடன் பிள்கோக்கி ஒன்று அச்சாக்கூடு ஒன்று
1740	13	130		சண்முகம் கந்தையா கொக்குவில்	மேற்கு ஒப்படைப்பட்டுக் குண்டுச்சங்கிலி பதக்கத்துடன்
1816	26	10		கந்தன் தம்பன் தாவடி	வெள்ளைக்கல் காதுக்குச்சி சோடிஒன்று சிகப்புக்கல் காதோலை சோடி ஒன்று
1818	26	8		ஐயன் கனகன் கொக்குவில்	மேற்கு அச்சாக்கூடு 1 முடியில்லை
				ஆடிமாதம்	
2531	3	7		நாகேந்திரி இராசையா தாவடி	ஒற்றைக்கல் மோதிரம் ஒன்று
				ஐப்பசிமாதம்	
479	2	11		சன்னையா குமாரசூரியர் கொக்குவில்மேற்கு	சிகப்புக்கல்காதோலை சோடி ஒன்று
545	13	91		சண்முகம் முத்தையா கொக்குவில்மேற்கு	முடிக்கூக்குத்திக்கொடி1
				கார்த்திகை மாதம்	
889	26	10		தம்பாபிள்ளை பொன்னம்பலம் வண்மேற்கு	கலாவரைமோதிர.1
				மாசிமாதம்	
1007	11	30		இளையவி சின்னப்பன் ஆனைக்கோட்டை	குண்டு வைத்த அரைப் பவுன் இரண்டு அச்சாக்கூடு 2
				1938ம் ஆண்டு தைமாதம்	
1325	18	9		வேலுப்பிள்ளை தாமோதரம்பிள்ளை கொக்குவில்மேற்கு	தாலிக் காய் ஒன்று
1361	22	8		பொன்னையா கப்பிரமணியம் கொக்குவில்	மேற்கு சிகப்புக்கல் காதோலை சோடி ஒன்று
				பங்குனிமாதம்	
1804	24	7		சின்னப்பொடியன் தம்பித்துரை கொக்குவில்மேற்கு	பெரிய கடுக்கன் சோடி ஒன்று
				சித்திரை மாதம்	
1866	3	7		பொன்னையா பேன்இராசம்மா கொக்குவில் மேற்கு	சிகப்புக் கல் காதோலை சோடி ஒன்று
1988	20	16		தம்பையா அப்பையா கொக்குவில்	மேற்கு வெள்ளைக்கல் புறேச் 1
2009	21	24		சின்னத்தம்பி கைம்பெண் சிதம்பரம் கொக்குவில்	மேற்கு சிகப்புக்கல் காதோலை சோடி ஒன்று
				வைகாசிமாதம்	
2174	13	9		சாவணமுத்து கப்பையா கொக்குவில்மேற்கு	ஒற்றைக்காப்பு காவடியில்லாமல்
2234	21	32		வேலுப்பிள்ளை தில்லையம்பலம் கொக்குவில்	மேற்கு சங்கிலி அட்டியல் ஒன்று பெட்டுடன்
				ஆவிமாதம்	
2362	8	10		சின்னத்தம்பி முத்தையா தாவடி	சிகப்புக்கல்காதோலைசோடி1
2363	8	9		சின்னையா ஆசைப்பிள்ளை கொக்குவில்	மேற்கு பெரிய கடுக்கன் சோடி ஒன்று

விற்பனவு நிகழும் பிமாதிவருஷம் ஐப்பசிமாதம் 5ம் திகதி சரியான (22-10-39) குயிற்றுக்கிழமை காலை 10 மணி தொடக்கம் எடுபட்டநகை பிறநீங்கலாக மிகுதி மேற்படியார்—த்தில் பிரசித்த லத்தில் விற்கப்படும்.

மு. சிவசுப்பிரமணியபிள்ளை உடையார்,
வெந்நில்மேனேஜர்.

(Mi[illegible] 12-10-39.)

இந்துசாதனத்திற்கு இன்றே விளம்பரஞ் செய்யுங்கள்

Nº 439

தி மலாயன் டிரேடிங் கொம்பனி
(சிங்கப்பூர்க் கொம்பனி)
இரும்பு, பித்தளைச் சாமான்கள் சீமேந்து வகைகள் விற்பனவு செய்வோர்
பெரியகடை, யாழ்ப்பாணம்.
"புரீருப்ஸைட்ட்"
K. A. இரத்தினசிங்கம்
¥5 0. 2-4-39 to 3-3-40

சாலாமிஸ்திரி லேகியம்

இந்த லேகியத்தை யான் அநேக பிரயுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தலால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கின்றார்கள். இதை நான் விளம்பரத்தில் உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரயுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இசனுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப் பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சலாஜித், கஸ்தூரி, குமரிதாகா, பீதாஞ,சாலாமுஸ்லி, சப்பேமுதவலி, பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகப்பு, லிங்கபஸ்பம், அரக்கபஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், தயகாந்த செந்தூரம், சாம்பிராணி பசுக்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைகள் சேர்த்துச் செய்யப்பெற்றிருக்கின்றன.

இசனுண் சீரதிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருகருவுத்திற்குள் உண்டாகுஞ் பக்கவாய, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் கார்தல், வலி, இடுப்புவலி, பக்கவாயு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். மற்றும் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால் மேற்சொல்லியவியாதிகள் குணமடைவதுடன் சூதகவாயு பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேக புஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால்வீருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை முதல் ஒன்றுக்கு ரூபா 20. அரைறுத்தலுக்கு ரூபா 10 கால்றுத்தலுக்கு ரூபா5 தபாற்செலவுபிரத்தியேகம் சிங்கப்பூர் பினங்கு முதலிய தொடுவாய் இராச்சியப்பகுதிக்கு வி. பீ. சட்டம் இல்லாததனால் முன் மணி ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை
ஸ்ரீ வெலுான ஆசோக்கிய வைத்தியசாலை,
வீட்டிலக்கம் 73 பழையவாடிரோட்டு,கோட்டைமுனை,மட்டக்களப்பு,சிலோன்.

Yo (4-1-39 to 31-12-39)

வான்முகில் வழாதுபெய்க மாவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குடிவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நலம்மிக வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHAIPPAM, residing at Vannarponnai East, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai Jaffna on Thursday October 12th 1939.